தினமணி

## வனத்துறை சார்பில் மரக்கன்றுகள் நடும் விழா

First Published : 27 Sep 2011 01:48:47 PM IST

திருவண்ணாமலை, செப். 26: வனத்துறை சார்பில் 1000 மரக்கன்றுகள் நடும் விழா புனல்காடு ஊராட்சிப் பள்ளியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பருவ மழையை பயன்படுத்தி மரக்கன்றுகள் நடும் திட்டத்தின் கீழ் மலைவாழ் மக்கள் முன்னேற்ற சங்கம் உதவியுடன் ஊராட்சிப் பள்ளிகளில் மரக்கன்றுகள் நடஹப்படவுள்ளன.

இத் திட்டத்தின் தொடக்க விழாவுக்கு வனச்சரகர் கருணாமூர்த்தி தலைமை தாங்கினார். ஆசிரியை விஜயலட்சுமி, எஸ்.செப்ந்தர்ராஜன் ஆகியோர் மரம் வளர்ப்பு குறித்து பேசினர்.

மரம் வளர்ப்பு சங்கத் தலைவர் ராமகிருஷ்ணன், வனக்குழுத் தலைவர் ஆடையூர் வீராசாமி, சமூக ஆர்வலர் சுப்பிரமணி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 3200 மூட்டை சூரியகாந்தி விதை ஏலம்

First Published : 27 Sep 2011 09:42:16 AM IST

வெள்ளக்கோவில், செப். 26: வெள்ளக்கோவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் திங்கள்கிழமை 3 ஆயிரத்து 200 மூட்டை சூரியகாந்தி விதை ஏலம் நடைபெற்றது.

குறைந்த பட்ச விலையாக கிலோ ரூ.30.76-க்கும், அதிக பட்சமாக ரூ.36.49-க்கும் விற்பனையானது. வாரத்தில் திங்கள், வியாழக்கிழமை இரண்டு நாட்கள் ஏலம் நடைபெறுகிறது.

ஏலத்துக்கு முந்தைய நாளே விதைகளைக் கொண்டு வர வேண்டும். வரும் வாரங்களில் வரத்தும், விலையும் பழைய நிலையிலேயே நீடிக்க வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது.

விற்பனைக் கூட கண்காணிப்பாளராக சி.மகுடேஸ்வரன் பொறுப்பு வகித்து வருகிறார்.

## இயந்திர நடவு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

First Published : 27 Sep 2011 02:49:09 PM IST

காரைக்கால், செப். 26: நடவு, அறுவடை உள்ளிட்ட இயந்திர முறை விவசாயத்துக்கு தயக்கமில்லாமல் விவசாயிகள் முன்வர வேண்டும் என காரைக்கால் கூடுதல் வேளாண் அதிகாரி அழைப்பு விடுத்துள்ளார்.

காரைக்கால் மாவட்டத்தில் பொதுவாக அறுவடையின்போது இயந்திரத்தை பயன்படுத்துவதில் ஆர்வம் செலுத்தும் விவசாயிகள், நடவு செய்ய இயந்திரத்தை பயன்படுத்தத் தயக்கம் காட்டி வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், பிள்ளைத்தெருவாசல் கிராமத்தை சேர்ந்த ஆரோக்கியதாஸ் என்பவர் வேளாண் துறையின் மானிய உதவியில் வாங்கிய நடவு இயந்திரத்தைக் கொண்டு, திங்கள்கிழமை தமது விளைநிலத்தில் நடவுப்பணி மேற்கொண்டார்.

இப்பணியை கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன் தொடங்கி வைத்து விவசாயிகளிடையே பேசியது:

இயந்திரம் மூலம் பயிர் நடவு செய்யும்போது, விரைவாக பணி முடியும்; செலவும் குறைவாகவே இருக்கும். இயந்திரத்தை பயன்படுத்தும்போது ஒரு ஹெக்டேரில் நடவு செய்ய ஓரிரு தொழிலாளர்களே போதும்.

அடுத்த ஆண்டு முதல் இயந்திர நடவுக்கு விவசாயிகள் முன்னுரிமை தர வேண்டும். இதற்கான தயக்கத்திலிருந்து அவர்கள் விடுபட, அவர்களுக்கு தேவையான விளக்கங்களை அளிக்க வேளாண் துறை தயாராக உள்ளது. நடவு இயந்திரம் வாங்க வேளாண் துறை சார்பில் 50 சத மானிய உதவி அளிக்கப்படுகிறது என்றார் அவர்.

கூட்டத்தில் கலந்துகொண்ட விவசாயிகள் எழுப்பிய கேள்விகளுக்கு சுரக்குடி வட்டார வேளாண் அலுவலர் கா.அமீனபீபி விளக்கம் அளித்தார்.

தினமலர்
உண்மையின் உரைகல்

**பார்த்தீனியம் நச்சுக்களை மேலாண்மை**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2011,00:00 IST



பார்த்தீனியம் விதைகள் முளைக்கும் முன்னும் முளைத்த செடிகள் பூ பூத்து விதை உண்டாவதற்கு முன்னும் கட்டுப்படுத்துவது மிகவும் அவசியம். இதனால் விதைகள் முற்றி மேற்கொண்டு இச்செடி பரவுவது தடுக்கப்படுகிறது. பார்த்தீனியம் விதைகள் முளைக்கும் முன் கட்டுப்படுத்தும் முறை பார்த்தீனியம் நச்சுக்களை விதைகள் முளைப்பதை தடுக்க மழை காலத்தில் மண்ணில் போதுமான ஈரம் இருக்கும்பொழுது அட்ராடாப் களைக்கொல்லியை எக்டருக்கு 2.5 கிலோ என்ற அளவில் சுமார் 625 லிட்டர் நீரில் கலந்து கைத்தெளிப்பானால் நிலத்தின் மேல் சீராக தெளிக்க வேண்டும்.

<u>பார்த்தீனியம் செடிகள் பூக்கும் முன் கட்டுப்படுத்தும் முறை</u>

**செடிகளை அகற்றி எரித்தல்:** பூப்பதற்கு முன் கையுறை அணிந்து அல்லது ஏதாவது கருவியை உபயோகித்து செடிகளை வேருடன் அகற்றி எரிப்பதனால் விதை உண்டாகி பரவுவது தடுக்கப்படுகிறது.

**களைக்கொல்லி உபயோகம்:** ஒரு லிட்டர் நீரில் 200 கிராம் சமையல் உப்பு (20 சதம்) மற்றும் 2 மில்லி டீபால் அல்லது சோப்பு திரவம் கலந்து நல்ல வெயில் நேரத்தில் செடிகள் முழுவதும் நனையும்படி கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும்.
* ஒரு லிட்டர் நீருக்கு 2,4-டி (பெர்னாக்சோன்) 10 கிராம் அல்லது கிளைபோசேட் (ரவுண்டப்) 15 மில்லியுடன் அம்மோனியம் சல்பேட் 20 கிராம் + சோப்பு திரவம் 2 மி.லி. அல்லது மெட்ரிபுசின்

(சென்கார்) 4 கிராம் ஆகிய களைக்கொல்லிகளில் ஏதாவது ஒன்றை கலந்து, வளர்ந்த பார்த்தீனியம் செடிகள் முழுவதும் நனையும்படி கைத்தெளிப்பானால் தெளிக்க வேண்டும்.

<u>உயிரியல் முறை கட்டுப்பாடு</u>

* தரிசு நிலங்களில் அடர் ஆவாரை மற்றும் துத்தி வகைச் செடிகளை போட்டு, செடிகளாக வளரச் செய்து பார்த்தீனியத்தின் வளர்ச்சியைக் குறைக்கலாம். * மேய்ச்சல் நிலங்களில் இயற்கையாக வளரும் தாவர இனங்களை வளர ஊக்குவிக்கலாம்.
* பார்த்தீனியம் செடியை தின்று அழிக்கக்கூடிய சைக்கோகிராமா பைக்கலரேட்டா என்ற மெக்சிகன் வண்டுகளை பரவச் செய்தும் பார்த்தீனியத்தை கட்டுப்படுத்தலாம்.

<u>பார்த்தீனியம் செடிகள் பூத்தபின் கட்டுப்படுத்தும் முறை</u>

* செடிகள் பூத்த பின்னும் மேற்கூறிய களைக் கொல்லிகளைத் தெளிக்கலாம். ஆனால் செடிகள் முழுவதும் அழியாது.
* இச்சூழ்நிலையில் பூத்த செடிகளை கையுறை அணிந்து அல்லது கருவிகள் மூலம் விதைகள் காற்றில் பரவும் முன் அகற்றி எரித்தல் வேண்டும்.

<u>பார்த்தீனியத்தை உரமாக்குதல்:</u>

பார்த்தீனியச் செடிகளை களைக்கொல்லி கொண்டு அழிக்காத தருணத்தில் அவற்றை வேருடன் அகற்றி நன்கு நறுக்கி, குழியில் போட்டு மக்கவைத்து உரமாக பயன்படுத்தலாம்.


**வி.கு.பால்பாண்டி மற்றும் செ.ராதிகா,** வேளாண் அறிவியல் நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவிலாங்குளம், அருப்புக்கோட்டை, விருதுநகர்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2011,00:00 IST









**<u>* தானிய அடை மிக்ஸ்:</u>** தெரிந்தெடுக்கப்பட்ட அளவுகளில் சிறு தானியம், பயறு வகைகளின் கலவை - அதிகமான ஊட்டச்சத்து, 6 மாதங்கள் வரை பயன்படுத்தலாம். *நன்மைகள்:* அதிகமான சிறுதானியங்களைப் பயன்படுத்துதல், உடனே கலந்து சாப்பிடக்கூடிய ஒரு உன்னதமான பொருள். அனைத்து வயதினருக்கும் ஏற்றது. செலவு - ஒரு கிலோ ரூ.55.88.

<u>*மேலும் விபரங்களுக்கு:*</u> **முதன்மையர், மனையியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை-625 104.போன்: 0452-242 3433.**

**** தானியங்கி புதர் நீக்கும் கருவி:*** குறைந்த விசைத்திறன் போதுமானது. புற்கள், களைகளை மண் அமைப்பு மாறாமல் வெட்ட ஏற்றது. அடிமரத்திலும் களை எடுக்க இயலும். கரடு முரடான இடங்களிலும் பயன்படுத்தலாம்; பார்த்தீனிய களைச்செடிகளை களைய வல்லது. புல்வெளி மற்றும் மைதானங்களைப் பராமரிக்க ஏற்றது. பவர் டில்லருடன் புழுதி ஓட்ட பயன்படக்கூடியது.

***குதிரைத்திறன்:*** டீசலால் இயங்கக்கூடிய, நீரால் குளிரூட்டப்படும் 13 எச்.பி. பவர் டில்லர், எரிபொருள் தேவை - 2 லிட்டர்/மணி; வெட்டும் தட்டுக்களின் எண்ணிக்கை-16. புதர் வெட்ட ஆகும் செலவு - ரூ.1800/எக்டர். உபயோகத்திறன் - 0.10எக்டர்/மணி (2 ஏக்கர்/நாள்); விலை ரூ.7000/-. மேலும் விபரங்களுக்கு: **"முதன்மையர், வேளாண் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிலையம், குமுலூர்-621 712. போன்: 0431-254 1218.**

*** பனை மரம் ஏறும் கருவி:** மரம் ஏறத் தெரியாதவர்களும் எளிதில் பயன்படுத்தலாம். மேலும் கீழும் நகரும் வசதி கொண்டது. மேல், கீழ் சட்டங்களின் உதவியுடன் நல்ல பிடிமானத்துடன் மரம் ஏற, இறங்க வசதியானது. அலுமினிய ஏணியின் உதவியுடன் மரத்தில் 3மீ உயரம் வரை ஏறி, பின் மடக்கு பலகையின் மேல் அமைந்த ஏறும் கருவியில் வசதியாக அமர்ந்து கருவியை இயக்கலாம். இதன் எடை - 17 கிலோ. விலை ரூ.6000/-

மேலும் விபரங்களுக்கு: **"பேராசிரியர் மற்றும் தலைவர், பண்ணைக்கருவித்துறை, வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003,
போன்: 0422-661 1257.**

*** கரும்புச்சாறில்இருந்து சர்க்கரைப் பாகை பதப்படுத்துதல்:**

பிழிந்துஎடுக்கப்பட்ட கரும்புச்சாற்றை அதிக நேரம் அறை வெப்ப நிலையில் சேமிக்க முடியாததால் கரும்புப்பாகாக மாற்றி சேமித்து வைக்கலாம். நன்மைகள்: கரும்புப்பாகு சிறந்த இயற்கை குணங்களுடன் விளங்குவதோடு அல்லாமல் ரசாயன சேர்க்கைஇன்றி விளங்குவது சிறப்பம்சமாகும். சர்க்கரை, பிற இயற்கை இனிப்புகளுக்கு பதிலாக கரும்புச்சாறின் பாகு பயன்படுத்தலாம். மிகையூட்டப்பட்ட பாரம்பரிய அடுமனை, இனிப்பு வகை உணவுப் பொருட்களை கரும்புச் சாறு பாகிலிருந்து தயாரிக்கலாம். கரும்புச்சாறு பாகை தரமான பெட் கலன்கள், கண்ணாடிக் குடுவைகள், அதிக அழுத்தமுள்ள பாலிதீன் பைகளில் அடைத்து 6 மாதங்கள் வரை சேமிக்கலாம்.

**பொருளாதாரம்:** கண்ணாடி பாட்டில் (200 மிலி) - ரூ.9.11 (கரும்பு பாகு); ரூ.12.61 (சர்க்கரை பாகு) வரவு செலவு விகிதம் - 1.73.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**ரேஷனில் பருப்பு, பச்சரிசி தட்டுப்பாடுவிலை ஏற்றத்தால் விநியோகம் குறைப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 28,2011,00:48 IST

ஈரோடு: ரேஷனில் கடந்த இரு மாதமாக பருப்பு, பச்சரிசி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.அ.தி.மு.க., ஆட்சி பதவியேற்றது முதல் ரேஷனில் பச்சை நிற கார்டுகளுக்கு 20 கிலோவும், அந்தியோதயா திட்ட அட்டைகளுக்கு 35 கிலோவும் இலவசமாக அரிசி வழங்கப்படுகிறது. குறிப்பிட்ட கிலோவை பச்சரியாக பெற்றுக் கொள்ளலாம். துவரம்பருப்பு கிலோ 30 ரூபாய், உளுந்தம்பருப்பு 40 ரூபாய், பாமாயில் லிட்டர் 25 ரூபாய்க்கு விநியோகிக்கின்றனர்.

ஈரோடு மாவட்டத்தில் பெரும்பாலான ரேஷன் கடைகளில், இரு மாதமாக துவரம் பருப்பு மற்றும் உளுந்தம் பருப்பு ஆகியவை மிகச்சிலருக்கே விநியோகிக்கப்பட்டது. சூரம்பட்டி, சாந்தான்கருக்கு பகுதி ரேஷன் கடைகளில் விசாரித்தபோது, "விலை ஏற்றத்தால் பருப்பு வகைகள் ரேஷன் கடைகளுக்கு மிகக்குறைவாகவே அனுப்பப்பட்டுள்ளது. அதனால், தொடர்ந்து பருப்பு வாங்கும் சிலருக்கு மட்டுமே விநியோகித்துள்ளோம். பச்சரிசியும் தட்டுப்பாடு நிலவுகிறது," என்றனர்.மாவட்ட வழங்கல் அலுவலகத்தில் விசாரித்தபோது, "விலை ஏற்றத்தால் பருப்பு வகைகள் கொள்முதல் செய்யப்பட்டதே குறைவுதான். அதனால், மூன்று மூட்டை பருப்பு விநியோகிக்கும் கடைக்கு, ஒன்று அல்லது இரண்டு மூட்டை மட்டும் அனுப்பப்பட்டது. பச்சரிசி தட்டுப்பாடு உள்ளது. சில ரேஷன் கடைகளில் பருப்பை மொத்தமாக சிலரிடம் விற்று விடுவதாக புகார் வந்துள்ளது; விசாரிக்கிறோம்' என்றனர்.
தீபாவளி நெருங்கும் நிலையில், ரேஷனில் பச்சரிசி, பருப்பு வகைகள் தட்டுப்பாடு நிலவுவது; பொதுமக்களை வெகுவாக பாதிக்கிறது.

**கடனிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் சென்னை உரத் தொழிற்சாலை : நிதி கிடைக்காததால் பாதிப்பு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2011,23:05 IST

மெட்ராஸ் உரத் தொழிற்சாலை, மத்திய அரசின் மறு சீரமைப்பு நிதி கிடைக்காததால், 540 கோடி ரூபாய் கடனிலிருந்து மீள முடியாமல் தத்தளித்து வருகிறது. யூரியா மற்றும் கலப்பு உரங்கள் தயாரித்து மானியத்தில் வழங்க, 1970ல், சென்னை அடுத்த மணலியில் மெட்ராஸ் உரத் தொழிற்சாலை (எம்.எப்.எல்.,) துவக்கப்பட்டது. தொழிற்சாலையில், 800 நிரந்தர தொழிலாளர்கள், ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஒப்பந்த தொழிலாளர்கள் உள்ளனர். இங்கு, முதலில் யூரியா, என்.பி.கே., கலப்பு உரங்கள்

தயாரிக்கப்பட்டன. கலப்பு உரங்களுக்கான, "பாஸ்போரிக் ஆசிட்' வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது. "பாஸ்போரிக் ஆசிட்' விலை உயர்வு மற்றும் பற்றாக்குறையால், கலப்பு உரம் தயாரிப்பு, ஏழு ஆண்டுகளாக முடங்கி விட்டது. தற்போது, யூரியா மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது. இதற்கு தேவையான, "நாப்தா' மணலியில் உள்ள சி.பி.சி.எல்., நிறுவனத்தில் இருந்து பெறப்படுகிறது.

நாளொன்றுக்கு, 2,500 டன் கலப்பு உரங்கள் தயாரிப்பு நின்றதாலும், யூரியா உற்பத்திக்கு, பழைய தொழில்நுட்பத்தில், "நாப்தா' எரிபொருளாக பயன்படுத்துவதால், செலவு அதிகமாகி, சென்னை உர ஆலை மிக மோசமான நிலைக்கு சென்றது. மத்திய அரசு, 2003ல், அனைத்து உர நிறுவனங்களுக்கும் ஒரே மாதிரியான விலை நிர்ணயம் செய்து, உரக் கொள்கையில் மாற்றம் செய்தது, மேலும் சிக்கலை உருவாக்கியது. கடன் சுமையில் தத்தளிப்பு: எம்.எப்.எல்., தொழிற்சாலையில், "நாப்தா' மூலம், ஒரு டன் யூரியா உற்பத்தி செய்ய, 25 ஆயிரம் ரூபாய் செலவாகிறது. விலை நிர்ணயம் மூலம், 4,650 ரூபாய் கிடைத்தது. மத்திய அரசு, 16 ஆயிரம் ரூபாயை மானியமாக வழங்கியும், டன் ஒன்றுக்கு, 4,350 ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டது.

இதனால், 2003லிருந்து கடந்த ஆண்டு வரை, எம்.எப்.எல்., நிறுவனம், 794 கோடி ரூபாய் கடனில் சிக்கித் தவித்தது. கடன் சுமை நாளுக்கு நாள் அதிகரிக்க, நிறுவனம், "கோமா' நிலைக்குச் சென்று, 2009ல், நலிவடைந்த நிறுவனமாகவும் அறிவிக்கப்பட்டது. உயிர் தப்பியது: பின், ஆண்டுக்கு, 166 கோடி ரூபாய் கூடுதல் மானியத்தை மத்திய அரசு அனுமதித்தது. இதனால், சென்னை உர ஆலை உயிர் பிழைத்தது. நாளொன்றுக்கு, 1,475 டன் உற்பத்தி என்ற நிலையில் இருந்து, தற்போது, 1,600 டன்னாக அதிகரித்துள்ளது. ஆண்டுக்கு, 195 கோடி ரூபாய் கடன் வந்த நிலை மாறி, கடந்த ஆண்டில், 100 கோடி ரூபாய் லாபம் ஈட்டியுள்ளது. மத்திய அரசு, கடந்த ஆண்டில் தான் கூடுதல் மானியமாக, 166 கோடி ரூபாயைக் கொடுத்தது. அது, அடுத்தடுத்த ஆண்டுகளில் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளதால், இனி ஆண்டுதோறும் கடன் தொகை வர வாய்ப்பில்லை. ஆனால், 2003 முதல், 2009 வரையிலான, 794 கோடி ரூபாய் கடனை அடைக்க, எந்த வழியும் செய்யப்படவில்லை.

இதுகுறித்து, உர ஆலை அதிகாரி ஒருவர் கூறும்போது, ""சென்னை உர ஆலையை காப்பாற்றும் பொறுப்பு, மத்திய நிதி அமைச்சகத்தின்கீழ் இயங்கும், நலிவடைந்த பொதுத்துறை நிறுவனங்களை மறு சீரமைக்கும் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கு ஏஜன்டாக, எஸ்.பி.ஐ., செயல்பட்டு வருகிறது. ""இதன் பயனாக, ஐ.டி.பி.ஐ., - ஐ.எப்.சி.ஐ.,களுக்கு நிதி நிறுவனங்களுக்கு உர ஆலை தர வேண்டிய, 170 கோடி ரூபாய் கட்டப்பட்டுவிட்டது.
மத்திய அரசுக்கு வட்டியுடன் செலுத்த வேண்டிய, 540 கோடி ரூபாய் பாக்கியை, தள்ளுபடி செய்யுமாறு பரிந்துரைக்கும் முயற்சியில் மறு சீரமைப்பு துறை ஈடுபட்டு வருகிறது,'' என்றார்.

இதுகுறித்து தொழிற்சங்கத்தினர் கூறும்போது, ""உரத்துறை இணை செயலரான சதீஷ்சந்திரா, ஆலை நிர்வாக இயக்குனராக உள்ளதால், மறுசீரமைப்பு நிதி பெறுவதில் சிக்கல் இருக்காது என கருதுகிறோம்," என்றனர். பரிந்துரையை ஏற்று, மத்திய அரசு, கடனை தள்ளுபடி செய்தால், சிக்கல் நீங்கி, சென்னை உர ஆலை புத்துணர்வு பெற்று, லாபகரமாக இயங்கும். யூரியா மட்டுமின்றி, கலப்பு உரங்கள் தயாரிப்பின் மூலம், விவசாய வளர்ச்சிக்கும் உதவிகரமாக அமையும். மீண்டும் கலப்பு உரங்கள்:மெட்ராஸ் உரத் தொழிற்சாலையில், யூரியா மட்டுமின்றி என்.பி.கே., கலப்பு உரங்கள் தயாரிப்புக்காக, மூன்று இயந்திர தொகுப்புகள் உள்ளன. "பாஸ்போரிக் ஆசிட்' வெளிநாட்டிலிருந்து பெறுவதில் சிக்கல், விலை உயர்வு காரணமாக கலப்பு உரங்கள் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இந்த யூனிட்டுகள், ஆறு ஆண்டுகளாக முடங்கிக் கிடந்தது.

இதனிடையே, "இண்டியன் பொட்டாஸ் லிமிடெட்' நிறுவனத்துக்காக கடந்த ஆண்டு இறுதியில், மெட்ராஸ் உர ஆலை, 20 ஆயிரம் டன் கலப்பு உரங்களை உற்பத்தி செய்து கொடுத்தது. இயந்திரங்கள் ஆறு ஆண்டுகள் முடங்கிக் கிடந்தாலும், தற்போது நன்றாக செயல்படும் நிலையில் உள்ளன. "இண்டியன் பொட்டாஸ்' நிறுவனத்துடன் இணைந்து, அடுத்த மாதம் முதல், கலப்பு உர உற்பத்தியைச் செய்ய எம்.எப்.எல்., நிறுவனம் திட்டமிட்டுள்ளது. இந்த இயந்திர தொகுப்புகளும் செயல்படத் துவங்கினால், மெட்ராஸ் உர ஆலை, தனியார் நிறுவனங்களோடு போட்டி போடும் அளவுக்கு வளம்பெறும்.- ஆர்.குமார் -

**தானிய ஈட்டுக்கடன் வழங்க இலக்கு**

பதிவு செய்த நாள் : செப்டம்பர் 27,2011,21:35 IST

தேனி : மாவட்டத்தில் தானிய ஈட்டுக்கடன் வழங்குவதற்கான, இலக்கு மூன்று லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. மாவட்டத்தில் கூட்டுறவு சங்கங்களில் இதுவரை, 114 குடோன்கள் கட்டப்பட்டுள்ளன. நடப்பு ஆண்டு கூடுதலாக 57 குடோன்கள் கட்டப்பட உள்ளன. இந்த குடோன்களில் விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை வைத்து தானிய ஈட்டுக்கடன் பெறலாம். இதுவரை 2 லட்சம் ரூபாய் தானிய ஈட்டுக்கடன் வழங்கப்பட்டு வந்தது. நடப்பு ஆண்டு முதல் தானிய ஈட்டுக்கடனுக்கான அதிக பட்ச வரம்பு 3 லட்சம் ரூபா யாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் தங்கள் விளை பொருட்களுக்கு விலை கிடைக்கும் வரை இங்கு வைத்திருந்து தானிய ஈட்டுக்கடன் பெற்றுக் கொள்ளலாம்.

---

தினகரன்

**விவசாயிகள் கவலை கூட்டுறவு சங்கங்களுக்கு உரம் சப்ளை நிறுத்தம்**

பதிவு செய்த நாள் : 9/28/2011 0:32:25




சேலம் : தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு முக்கிய உரங்களின் சப்ளை அடியோடு நிறுத்தப்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.
சேலம், நாமக்கல் மாவட்ட விவசாயிகளுக்கு சேலம் மண்டல டான்ஃபெட் மூலம் 10:26:26 என்ற பெயரில் என்.பி.கே. உரம் சப்ளை செய்யப்படுகிறது.

ஆனால் நேற்று காலை நிலவரப்படி, இந்த கிடங்கில், வெறும் 300 டன் யூரியாவும், 67 டன் டி.ஏ.பி., உரமும் இருப்பு இருந்தது. இவையும் நேற்று மாலையில் கூட்டுறவு சங்கங்கங்களுக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டன.

சேலம், நாமக்கல் மாவட்டங்களில் 360 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளன. இந்த சங்கங்களுக்கு, நடப்பு பருவத்தில் 1000 டன் யூரியா, 1500 டன் டிஏபி, 20:20 ரக உரம் 2000 டன், பொட்டாஷ் 2500 டன், 10:26:26 ரக உரம் 2000 டன் என மொத்தம் 9 ஆயிரம் டன் உரம் தேவைப்படுகிறது.

ஆனால், நடப்பு மாதத்தில் இதுவரை 20:20 உரம் 2640 டன்னும், டிஏபி 2593.85 டன்னும் மட்டுமே தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது.

இந்த உரங்கள் தேவைக்கேற்ப அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது என்றாலும், மற்ற முக்கிய உரங்களுக்கு கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து டான்ஃபெட் அதிகாரிகளிடம் கேட்டபோது, ÔÔஇந்தியாவுக்கு ஓமன், தைவான் நாடுகளில் இருந்து அதிகளவில் உரம் சப்ளை செய்யப்படுகிறது. தமிழ்நாடு மட்டுமின்றி நாடு முழுவதும் உரத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. சேலம் மண்டலத்துக்கு இன்னும் ஒரு வாரத்தில் தேவையான உரம் சப்ளை ஆகும்ÕÕ என்றனர்.